**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 114/2019**

பெயர் : ராஜா (எ) பாஸ்கர் P.W.1.

த/பெ. : வேலாயுதம்

தேதி : 24.07.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை: –**

**1.** நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது இடம் எனக்கு வேண்டும் என கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நத்தம் புல எண் 176/1A ல் 0.39 1/4 செண்ட், புஞ்சை புல எண் 179/5 ல் 0.19 செண்ட் ஆகியவை சிவக்குமார் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சிவக்குமாருக்கு சொந்தமான இடத்தை 4ம் பிரதிவாதி நூர்ஜகான் என்பவர் பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் மூலம் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த கிரயம் ஆவணம் செம்பனார்கோவில் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 124/1994 என பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. 4ம் பிரதிவாதி நூர்ஜகான் என்பவருக்கு சொந்தமான சொத்தினை 5ம் பிரதிவாதி முரளிதரன் என்பவர் 06.06.2011ம் தேதி கிரயம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 5ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதியிடமிருந்து உரிய மறுபயன் கொடுத்து கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி வாங்கிய கிரயம் செம்பனார்கோவில் சார் பதிவாளர்அலுவலகத்தில் ஆவண எண். 1188/2011 என பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தின் படி சொத்து உரிமையாளர் 5ம் பிரதிவாதி என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி கிரயம் பெற்ற கிரய ஆவணத்தில் கண்டுள்ள சொத்தை தான் நான் இந்த வழக்கில் தாவா சொத்தாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

3. தாவா சொத்து எனக்கோ அல்லது எனது மனைவிக்கோ பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கான ஆவணங்களளை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் 2ம் வாதியை இந்த வழக்கில் விசாரணை செய்வேனா என்றால் விசாரணை செய்வேன். தாவா சொத்திற்கான பட்டா எனது மனைவியின் பெயரில் கொடுக்கபட்டதால் தான் நான் தாவா சொத்தில் உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். எனது மனைவி பெயருக்கு வட்டாட்சியரால் வழங்கப்பட்ட பட்டா தவறானது என உரிய விசாரணை மேற்கொண்டு ந.க.எண். 1203/2015/ஆ 3 ன் படி 10.03.2015 ல்

மயிலாடுதுறை கோட்டாட்சியரான 3ம் பிரதிவாதியால் ரத்துசெய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி உத்தரவை எதிர்த்து நானோ எனது மனைவியோ எந்த மேல்முறையீடும் செய்யவில்லை என்றால் சரிதான். பட்டா ரத்து செய்யப்பட்டது எனக்கு தெரியாது. எனது மனைவியின் பெயரில் உள்ள பட்டாவை 3ம் பிரதிவாதி ரத்து செய்து 5ம் பிரதிவாதி பெயருக்கு பட்டா மாறுதல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. தாவா சொத்திற்கு அருகில் எனக்கு வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு மின்இணைப்பு, வீட்டு வரி உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு வழங்கப்பட்ட மின் கட்டண ரசீதுகள், வீட்டு வரி ரசீதுகள் ஆகியவற்றை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வாசாஆ 1 ஆன ஆவணம் 3ம் பிரதிவாதியால் ரத்து செய்யப்பட்டுள்ளதால் அந்த ஆவணம் செல்லக்கூடியது இல்லை என்றால் சரியல்ல. ரத்துசெய்யப்பட்ட பட்டாவின் அடிப்படையில் நானும் எனது மனைவியும் எந்த உரிமையும் கோர இயலாது என்றால் சரியல்ல.

5. 3ம் பிரதிவாதியால் எனது மனைவி பெயரில் வழங்கப்பட்ட குடியிருப்பு பட்டாவானது ரத்துசெய்யப்பட்டுவிட்டதால் நான் தாவா சொத்தை பொருத்து 2,3 பிரதிவாதிகள் 2ம் வாதி பெயரில் வழங்கபட்ட குடியிருப்பு பட்டாவை ரத்துசெய்யக்கூடாது என கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி தாவா சொத்தின் உரிமையாளர் என்பதால் சொத்தின் உரிமையாளருக்கு எதிராக நான்கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

6. தாவா சொத்தை பொருத்து எனது மனைவி பெயரில் வழங்கப்பட்ட பட்டாவை தவிர வேறு பதிவு செய்யப்பட்ட உரிமை மூல ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யாததால் நான் கோரிய பரிகாரங்கள் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து தவறான புல எண்ணை குறிப்பிட்டு பிரதிவாதிகளின் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் அனுபவமானது பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் படி 5ம் பிரதிவாதியின் வசம் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் வசமானது என்னிடமோ எனது மனைவியிடமோ எந்த காலத்திலும் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து 5ம் பிரதிவாதிக்கு சட்டப்படி உரிமை உடையது என்பதால் அவர் தாவா சொத்தில்

அத்துமீறி நுழைய வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை 5ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்வதற்கு எவ்வித வழக்கு மூலமும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு சொந்தமான இடத்திற்கு அருகில் தாவா சொத்து உள்ளதால் அதை அபகரிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.